அம்பாறை மாவட்டத்தின் 29 கமநல சேவைக் குழுக்கள் - 2024

---

1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 அம்பாறை மாவட்டத்தின் 29 கமநல சேவைக் குழுக்களின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 2024 ஆம் ஆண்டிற்குரிய அம்பாறை மாவட்டத்தின் 29 கமநல சேவைகள் குழுக்களுக்குரியதாக கணக்காய்வு அறிக்கைகள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அந்த 29 கமநல சேவைக் குழுக்களுக்காகவும் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்ததுடன் அதற்கான காரணங்களாக இருந்த பொருண்மையான குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

1.3 நிதிக்கூற்றுக்கள்

1.3.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்கள், கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்காமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2017 பெப்ரவரி 09 ஆந் திகதிய 107 ஆம் இலக்க சுற்றறிக்கையின் (திருத்தம் 05) பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வருடாந்தம் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மஹ ஒயா கமநல சேவைகள் குழுவால் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு நியமங்கள் பதிவு செய்யப்பட்ட குறிப்பில், பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட்டதாக குறிப்பாகக் குறிப்பிடவில்லை.	பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை	பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றுவதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ஆ)	05 கமநல சேவைகள் குழுக்களால் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றக்களில் உள்ளடக்கப்பட வேண்டிய கூறுகளான உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று தயாரிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டிலிருந்து அந்த உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் என்பதாக	அனைத்து கூறுகளும் உள்ளடக்கப்பட்டு நிதிக் கூற்றக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(இ)	கமநல வங்கி மற்றும் கமநல சேவைகள் குழு என்பவற்றின் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 06 கமநல சேவைகள் குழுக்களால் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	அடுத்த ஆண்டில் சரி செய்து கொள்வதாக	ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மஹஓயா கமநல சேவைகள் குழுவால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்பு வைப்புக்கள் போன்ற 02 கணக்கு மீதிகளின் கூட்டுப்பறுமதியான ரூபா 258,765 தொகை நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் ஆண்டில் சரி செய்யப்படும் என்பதாக	நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரித்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	02 கமநல சேவைக் குழுக்கள் மீளாய்வாண்டின் ஆரம்ப திரட்டிய நிதிய மீதி ரூபா 6,245,240 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.	எதிர்வரும் ஆண்டில் சரி செய்யப்படும் என்பதாக	நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ஆரம்ப திரட்டிய நிதியத்தில் சரியான பெறுமதி காண்பிக்கப்பட வேண்டும்
(இ)	பல்லன்ஓயா கமநல சேவைக் குழுவில் 2023 ஆம் ஆண்டில் ரூபா 10,449,127 ஆன யூரியா இறுதி மீதியொன்று காணப்பட்ட போதிலும் யூரியா வியாபாரக் கணக்கின் ஆரம்ப மீதியாக ரூபா 14,625,000 எனக் குறிப்பிடப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டில் யூரியா	யூரியா கையிருப்பின் பெறுகை விலை குறிப்பிடப்படாதிருந்ததுடன் ரூபா 14,625,000 என உரத்தின் கொள்வனவாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக	உர இருப்பின் ஆரம்ப மீதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

	ஆரம்ப இருப்பு மீதி ரூபா 4,175,873 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.		
(ஈ)	பல்லன்ஓயா கமநல சேவைக் குழுவில் நடைமுறைக் கணக்கிற்கு உரியதாக தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக்கூற்றின் படி காசேட்டின் மீதி ரூபா 11,709,868 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதும் நிதி நிலைமைக் கூற்றில் அது ரூபா 1,109,868 என ரூபா 10,600,000 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	ரூபா 11,709,868 ஆக குறிப்பிடப்பட வேண்டிய தொகை கணனி மயப்படுத்தும் போது ரூபா 10,600,000 தொகை தவறி அச்சிடப்பட்டுள்ளதாக	கணக்கு மீதிகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டின் போது 03 கமநல சேவைகள் குழுக்களால் கமநல வங்கிகளுக்காக வாங்கப்பட்ட ரூபா. 456,339 பெறுமதியான கணக்கீட்டு மென்பொருளையும், 05 கமநல சேவைகள் குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட ரூபா. 2,060,847 பெறுமதியான மூலதனச் செலவினத்தையும் மூலதனமாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் ஆண்டில் சரி செய்யப்படும் என்பதாக.	சொத்துக்கள் மற்றும் மூலதன செலவினம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்
(ஊ)	05 கமநல சேவைகள் குழுக்களுக்குரிய மீளாய்வாண்டில் நிலையங்களை புனரமைப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 21,287,950 ஆன செலவினத்தில் மூலதனமாக்க வேண்டிய உருப்படிகளை இனங்கண்டு அந்த உருப்படிகளின் பெறுமதியை மூலதனமாக்கியிருக்கவில்லை. .	எதிர்வரும் ஆண்டில் சரி செய்யப்படும் என்பதாக	சரியான பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(எ)	03 கமநல சேவை குழுக்களில் யூரியா, MOP மற்றும் TSP ரூபா 4,706,171 கூட்டுத்தொகையான விற்பனைப் பெறுமதி உர இருப்பின் பெறுமதி வியாபாரக் கணக்கில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	எதிர்வரும் ஆண்டில் சரி செய்யப்படும் என்பதாக.	நிதிக் கூற்றுக்களில் உரிய கொடுக்கல் வாங்கல்கள் சரியாக காண்பிக்கபபட வேண்டும்.

(ஏ)	புல்லவன்ஓயா கமநல சேவைக் குழுவின் மீயாய்வாண்டின் இறுதி இருப்பின் பெறுமதி ரூபா 6,797,169 ஆக இருந்த போதும் நிதி நிலைமைக் கூற்றில் அப்பெறுமதி ரூபா 5,556,081 என ரூபா 1,241,088 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.	கணக்காய்வின் அவதானிப்பு சரியானது நிதி நிலைமைக்கூற்றில் இருப்புப்பெறுமதியை பதிவு செய்யும் போது இன் உண்மையான MOP இருப்பு மீதி சீர் செய்யப்பட வேண்டும் என்பதாக	இறுதி இருப்பு பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்
(ஐ)	02 கமநல சேவைக் குழுக்களின் யூரியா மற்றும் MOP ஆரம்ப இருப்பு மீதிகளின் மொத்தம் ரூபா 5,519,220 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.	எதிர்வரும் ஆண்டில் சரி செய்யப்படும் என்பதாக.	ஆரம்ப இருப்பு பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். .
(ஒ)	இறக்காமம் கமநல சேவைக் குழுவினால் ரூபா 2,628,150 பெறுமதியான யூரியா இருப்பொன்று நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் ஆண்டில் சரி செய்யப்படும் என்பதாக.	இருப்பு பெறுமதி சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஓ)	மீளாய்வாண்டில் அக்கரைப்பற்று கிழக்கு கமநல சேவைக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட யூரியா TSP மற்றும் MOP இருப்பு 48,538 கிலோ கிராம் அளவிலான இறுதி மீதி ரூபா 8,172,474 ஆக இருந்ததுடன் நிதி நிலைமைக் கூற்றில் அது ரூபா 10,379,556 ஆக காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ரூபா 2,207,082 ஆன இணக்கமின்மையொன்று காணப்பட்டது.	2025 ஆண்டில் சரி செய்யப்படும் என்பதாக	இருப்பு பெறுமதி சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

1.3.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

	கணக்காய்வு அவதானிப்புகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மடானகம கமநல சேவைக் குழுவிற்குரிய மீளாய்வாண்டில் யூரியா மற்றும் MOP உரத்தின் ஆரம்ப இருப்பு மீதிகளின் பெறுமதிகளில் பரினாம இருப்புக் கணக்கின் பிரகாரம் மற்றும் வியாபாரக் கணக்கின் பிரகாரம் முறையே ரூபா 1,448,883 மற்றும் ரூபா 49,582 ஆன . இணக்கமின்மையொன்று காணப்பட்டது.	2025 ஆம் ஆண்டில் சரி செய்யப்படும் என்பதாக	இணக்கமின்மைக்குரிய காரணங்களைக் கண்டு பிடித்து விரைவில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ)	பதியதலாவ கமநல சேவைக் குழுவின் மீளாய்வாண்டிற்குரிய 03 கணக்கு உருப்படிகளில் பரினாம இருப்புக் கணக்கின் பிரகாரம் பெறுமதி மற்றும் வியாபாரக் கணக்கின் பெறுமதிக்கு இடையே ரூபா 2,919,944 ஆன . இணக்கமிண்மையொன்று காணப்பட்டது.	அடுத்த ஆண்டில் சரி செய்யப்படும்.	– மேற்படி -
(இ)	தெஹிஅத்தகண்டிய கமநல சேவைக் குழுவின் 07 கணக்கு விடயங்களுக்குரிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பரீட்சை மீதியின் பிரகாரம் பெறுமதி மற்றும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதிக்கு இடையே ரூபா 3,709,695 ஆன இணக்கமின்மையொன்று காணப்பட்டது.	அடுத்த ஆண்டில் சரி செய்யப்படும் என்பதாக	இம்மீதிகளை சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	லாகுகல கமநல சேவைக் குழுவின் பரிமாண இருப்புக் கணக்கில் மானிய உரக் கணக்கின் பெறுமதி ரூபா 12,018,697 ஆக இருக்க வேண்டிய போதிலும் அது உரிய கணக்கில் ரூபா 2,620,935 என காண்பிக்கப்பட்ட காரணததினால் ரூபா 9,397,762 ஆன இணக்கமின்மையொன்று காணப்பட்டது.	அடுத்த ஆண்டில் சரி செய்யப்படும் என்பதாக	இணக்கமிண்மைக்குரிய காரணங்களைக் கண்டு பிடித்து விரைவில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(உ)	லாகுகல கமநல சேவைக் குழுவின் மானிய உர விற்பனைப் பெறுமதி பரிமாண இருப்புக் கணக்கில் ரூபா 2,620,935 எனவும் வியாபாரக் கணக்கில் ரூபா 13,569,237 ஆகவும் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 20,607,941 எனக் காண்பிக்கப்பட்ட காரணததினால் அப்பெறுமதிக்கு இடையே இணக்கமின்மையொன்று காணப்பட்டது.	அடுத்த ஆண்டில் சரி செய்யப்படும் என்பதாக	- மேற்படி -

1.3.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	26 கமநல சேவைக் குழுக்களுக்கு உரிய நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 140,872,351 ஆன சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதிகளைப் பரீட்சிப்பதற்காக போதியளவான சான்றுகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் காணப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக உறுதிப்படுத்துதல்/ ஏற்றுக் கொள்ள முடியாதிருந்தது.	நிலையத்திற்குச் சொந்தமான சான்றுகள் மற்றும் தகவல்களை கண்டு பிடிக்க முடியாத அம்மீதிகளை தீர்வு செய்வதற்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு	குறித்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக தேவையான சான்றுகள் மற்றும் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

		வருவதாகவும் 2025 ஆம் ஆண்டின் போது அம்மீதிகளை கணக்கு அறிக்கையில் சீராக்கம் செய்வதற்கு எதிர்பார்ப்பதாக	
(ஆ)	லாஹுகல கமநல சேவைக் குழுவின் உரத்திற்காக ரூபா 10,557,309 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 13,926,100 எனக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ரூபா 3,368,791 பெறுமதிக்குரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் சீராக்கம் செயவதாக	அனைத்து கொடுப்பனவுகளுக்கரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள
(அ)	2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம்			
(i)	53(1) ஆம் பிரிவு	08 கமநல சேவைக் குழுக்களுக்குரிய மீளாய்வாண்டிற்குரிய வயல் காணிகள் பெயர் பதிவேட்டைத் திருத்துவதற்காக 516 விண்ணப்பங்கள் கிடைத்திருந்த போதிலும் 204 விண்ணப்பங்கள் மாத்திரம் திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.	எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேவையான திருத்தங்கள் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ii)	55(1) ஆம் பிரிவு	லாகுகல கமநல சேவை குழு அதிகாரப் பிரதேசத்திற்குள்ளாக விவசாயக் காணிகளின் அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	மீளாய்வாண்டின் இறுதி வரையில் சர்ச்சைக்குரிய காணிகள் தவிர ஏனைய காணிகளின் அளவீட்டுப் பணிகள், பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக	சர்ச்சைக்குரிய காணிகள் தொடர்பான தேவையான சட்ட நடவடிக்கைகள் மற்றும் அளவீட்டுப் பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

(iii)	56(4) ஆம் பிரிவு	லாகுகல கமநல சேவை அதிகாரப்பிரிவினுள் ஏக்கர் வரி செலுத்தாமல் உள்ளவர்களுக்கெதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் எதுவம் மேற்கொள்ளப்படவில்லை	எதிர்காலத்தில் ஏக்கர் வரி அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுப்பதாக	சட்டத்தின் பிரகாரம் நிலுவை ஏக்கர் வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம்			
(i)	நிதிப்பிரமாணம் 110	06 கமநல சேவைக் குழுக்களுக்கு உரிய நிதிப் பிரமானங்களின் பிரகாரம் இழப்புக்கள் மற்றும் நட்டப் பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.	இழப்பு மற்றும் நட்டப் பதிவேடு ஒன்று பேணிச் செல்வதற்கு இணங்குகின்றோம்.	நிதிப்பிரமாணத் தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	நிதிப்பிரமாணம் 502(2)	10 கமநல சேவைக் குழுக்கள் உரிய நிதிப் பிரமானத்தின் பிரகாரம் நிலையான சொத்து பதிவேடு ஒன்றைப் பேணிச் சென்றிருக்கவில்லை.	நிலையான சொத்துப் பதிவேடு தயாரித்து பேணிச் செல்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத் தருகின்றோம்.	சொத்துக்கள் நிர்வாகம் மற்றும் பாதுகாப்பிற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	கமநல அபிவிருத்தி ஆணையாளரின் சுற்றறிக்கை மற்றும் கடிதங்கள்			
(i)	2006 திசெம்பர் 01 ஆந் திகதிய 2006/08 ஆம் இலக்க சுற்றறிக்கை	லாகுகல கமநல சேவை செயற்குழுவினால் இருப்பு தொடர்பான சுயாதீன கணிப்பீட்டுச் சபையொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை	காலாவதியான கைதவிர்ப்பிற்காக மாவட்ட அலுவலகத்தினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக	இருப்பு பரிசோதனை மற்றும் காலாவதியான இருப்பு கைதவிர்ப்பிற்காக துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ii)	2020 யூன் 25 ஆந் திகதிய இலக்கம் 08/2020 என்ற கமநல அபிவிருத்தி ஆணையாளரின் சுற்றறிக்கை	07 கமநல சேவைக் குழுக்களுக்கு உரிய 14 உத்தியோகத்தர்களால் பிணை வைப்பு வைக்கப்பட்டிருக்கவில்லை.	உரிய உத்தியோகத்தர்களுக்காக எதிர் காலத்தில் பிணை வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்	பிணை வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2014 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய இலக்கம் 07/2014 (107 திருத்தம் iii) சுற்றறிக்கை	நாளாந்தம் கையில் வைத்திருக்கக் கூடிய ஆகக் கூடிய தொகை ரூபா 10,000 ஆக இருந்த போதிலும் 04 கமநல சேவைக் குழுக்களால் 2024 சனவரி முதல் திசெம்பர் வரையான காலத்தில் 72 சந்தர்ப்பங்களின் போது ரூபா 243,528 முதல் ரூபா 10,707,889 வரையான வீச்சில் காசு கையில் வைக்கப்பட்டிருந்தது.	நிலையங்களில் பணிச்சுமை அதிகமாக இருப்பதால், தினமும் வங்கிக்குச் சென்று பணத்தை வைப்புச் செய்வதற்கு முடுடியாதுள்ளதாக	அரசின் பணத்திற்கு பாதுகாப்பு வழங்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2023 மே 16 ஆந் திகதிய 7/7/க.கா.பி.உ / /2023 உடைய கடிதம்	2023 மே 31 ஆந் திகதி வரையில் Geo Goviya நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காணி அளவீடு பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் 18 கமநல சேவைக் குழுக்களில் 69,445 காணித் துண்டுகளில் 43,592 இற்குரிய காணிகளில் அமைவிட நெட்டாங்கு மற்றும் அகலாங்கு அளவீடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	போதியளவான பதவியணியினர் காணப்படாமையினால் Geo Goviya நிகழ்ச்சித் திட்டத்தை குறித்துரைத்த நேரத்தில் பூர்த்தி செய்ய முடியாதிருந்ததாக	குறித்துரைத்த திகதியில் நிகழ்ச்சித் திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமை தொடர்பாக பரீட்சித்து அல்லது நிகழ்ச்சித் திட்டத்தை விரைவு படுத்துவதற்கான திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

அம்பாறை மாவட்டத்திற்குரிய 29 கமநல சேவைக்ள குழுக்களுக்கு உரிய மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 29,057,824 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 69,317,161 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 40,259,337 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. அத்தோடு 29 கமநல கமநல வங்கிகளுக்குரிய மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகளின் மொத்தம் ரூபா 3,968,086 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,601,916 ஆக இருந்ததால் கமநல வங்கிகளில் நிதி விளைவுகளில் ரூபா 633,830 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கமநல அபிவிருத்தித் திணைக்களம் அம்பாறை மாவட்ட அலுவலகத்தால் 2008, 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டு கால எல்லையில் தவணைப் பணம் செலுத்தும் அடிப்படையில் 09 கமநல சேவை குழுக்களுக்கு வழங்கப்பட்டிருந்த 67 கை உழவு இயந்திரங்களுக்காக 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 9,981,134 தொகை மேலும் தீர்த்து வைக்க வேண்டி இருந்தது.	எதிர்காலத்தில் அறவிடுவதற்கும், கொடுப்பனவுகளை புறக்கணிக்கின்றவர்களுக்கு சட்ட ரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதாக	நிலவைத் தவணைப் பணத்தை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	27 கமநல சேவை குழுக்களுக்கு உரிய 03 வருடங்கள் முதல் 24 வருட காலப்பகுதியில் பல்வேறு தரப்பினரிடம் இருந்து கிடைக்க வேண்டியதாகக் காணப்படுகின்ற ரூபா 145,931,110 பெறுமதியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ தேவையான நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட செயலகம் -அம்பாறை பிரதான அலுவலத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	உரிய நிதியினை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	27 கமநல சேவைக் குழுக்களுக்கு உரிய 05 வருடங்கள் முதல் 26 வருடங்கள் வரையிலான கால வீச்சில் முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 291,427,497 ஆன செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சில மீதிகளுக்கான தகவல்கள் காணப்படாதிருந்ததுடன் கண்டறியக் கூடிய மீதிகளை எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக.	செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை பள்ளன்ஓயா கமநல சேவைக் குழுவின் களஞ்சியத்தில் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதநிலையில் காணப்படுகின்ற இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த 348.33 கி.கிராம் உரம், 700 கிலோகிராம் யூரியா 772.5 லீற்றர் திரவ உரம் மற்றும் 135 லீற்றர் உயிரியல் சேதனப் பசளை காணப்பட்டதுடன் அவற்றை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	பதில் அளிக்கப்பட வில்லை.	உரிய காலப்பகுதியில் விவசாய இரசாயனங்களை விவசாயிகளுக்கு பகிர்நதளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	லாஹுகல நெல் வயலிலிருந்து 600 கியுப் மணலை அகற்றுவதற்காக ஒரு தனிநபருக்கு கமநல அபிவிருத்தித்	அடுத்த ஆண்டில் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	அறவிடப்படாத வருமானத்தை பொறுப்பான

	உதவி ஆணையாளரிடமிருந்து 2024 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய கடிதத்தின் மூலம், அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும், 100 கியுப் மணலுக்கு ரூபா. 20,000 மாத்திரமே அறவிடப்பட்ட காரணத்தினால் மீதமுள்ள 500 கியுப் மணலுக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 100,000 வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. அகற்றப்பட்ட கியுப் மணல் அளவைச் சரிபார்ப்பதற்கு முகாமைத்துவம் எந்த நடைமுறையையும் எடுக்காமல் இருந்ததுடன் மணலை அகற்றுவதற்கு அனுமதி வழங்குவதற்கு முன்பு புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்திடமிருந்து அனுமதிக் கடிதம் பெற்றுக்கொள்ளபட வேண்டிய போதிலும் போதிலும், அத்தகைய கடிதம் ஒன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.		தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கும் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்திடம் அனுமதி பெறாமல் தங்களது அதிகார எல்லையை மீறிச் செயல்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஊ)	நெல் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நெல் ஆலை உரிமையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்ட நெல்லுக்காக 2013 ஆம் ஆண்டு முதல் உஹன கமநல சேவைக் குழுவிற்கு அறவிட வேண்டிய ரூபா 1,408,825 பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது வழக்கு நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதுடன் அதன் மூலம் அந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக	உரிய பணத்தை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(எ)	2003 ஆம் ஆண்டில் விவசாய வங்கி கடன் மீதி பட்டியலில் காண்பிக்கப்பட்டுள்ள சுழற்சிக் கடன் ரூபா 445,802 மற்றும் கையில் உள்ள காசு மீதி பற்றாக்குறையாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 93,035 என்பவற்றை தீர்த்து வைப்பதற்கு நாமல்தலாவ கமநல சேவை குழுவினால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	மீதிகளை தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும்.
(ஏ)	10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் நிதிக் கூற்றுக்களில் முன் கொண்டு வரப்படுகின்ற ரூபா 634,308 பெறுமதியான கிடைக்க வேண்டிய செயற்பாடற்ற கடன் மீதி மற்றும் ரூபா 599,527 பெறுமதியான செலுத்த வேண்டிய சுழற்சி நிதி என்பவற்றைத் தீர்த்து வைப்பதற்காக மஹாஓயா கமநல சேவை குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த சுழற்சி கடன் மீதிகளை எதிர்காலத்தில் தீர்வ செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக	மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும்.

(ஐ)	பள்ளன்ஓயா கமநல சேவைக் குழுவின் முன்னாள் எழுவினைஞரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 500,226 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	உரிய பணத்தை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஒ)	2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனியினால் 05 கமநல சேவைக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 7,801,412 பெறுமதியான கூட்டுத்தாபன கரைசல் உரம் இருப்பு காலாவதியாகி இருந்ததுடன் அவை தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் குழுவில் குவித்து வைக்கப்பட்டிருந்தது.	இந்த இருப்பை அகற்றுமாறு உரிய உரக் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதாக	காலாவதியான உரத்தை அகற்றுதல் அல்லது நட்டம் ஏற்பட்டிருந்தால் அது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை விரைவில் எடுக்கப்படல் வேண்டும்.
(ஓ)	தம்பிலுவில் கமநல சேவைகள் குழுவைச் சேர்ந்த 66 விவசாயிகளுக்குச் சொந்தமான 140 ஏக்கர் காணிக்கு நீர்ப்பாசனம் செய்யும் 02 குளங்கள், மீளாய்வாண்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக சேதமடைந்திருந்ததுடன். கமநல சேவைகள் மாவட்ட அலுவலகத்தினால் அந்தக் குளங்களைப் புனரமைப்பதற்குத் தவறிய காரணத்தினால், சம்பந்தப்பட்ட விவசாயிகள் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருமானம் ஈட்டும் வாய்ப்பை இழந்திருந்தனர்.	அடுத்த ஆண்டின் திட்டத்திற்காக இத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக	சேதமடைந்த குளங்களைப் புனரமைப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஔ)	11 கமநல சேவை குழுக்களுக்கு உரியதாக கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரின் (தா.அ) 2006 யூன் 14 ஆந் திகதிய இலக்கம் 7/5/6/வி.வி/அ.க ஆம் இலக்க கடிதத்தின் 4 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் வருடாந்தம் அறவிடப்படுகின்ற ஏக்கர் வரி நிதியாண்டின் மார்ச் 31 ஆந் திகதி வரையில் அறவிடல் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முன்னைய ஆண்டுகளுக்கு உரிய ரூபா 5,625,610 ஆன ஏக்கர் வரி பெறுமதியொன்று அறவிட வேண்டியதாக காணப்பட்டது.	அடுத்த ஆண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக	முன்னைய ஆண்டுகளுக்கு உரிய அறவிட வேண்டியதாகக் காணப்படுகின்ற ஏக்கர் வரிப் பெறுமதியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2021 ஆம் ஆண்டின் போது 03 கமநல சேவைக் குழுக்களுக்கு கிடைத்திருந்த ரூபா 10,000,000 பெறுமதி உடைய நாற்றுக்கள் நடும் இயந்திரங்கள் 10 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 03 வருடங்கள் அளவிலான காலம் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.	உலக வங்கி உதவியின் கீழ் கிடைக்கப் பெற்ற நாற்று நடும் இயந்திரங்களைப் பயன்படுத்தி மாதிரி நெற் பயிர்ச் செய்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டதுடன் நாற்று நடும் இயந்திரங்களில் நாற்று நடும் இடைவெளி அதிகரித்தமையினால் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் நட்டம் ஏற்படுவதாக இனங்காணப்பட்டிருந்தது. அந்த இயந்திரங்களைப் பயன்படுத்தி பயிர் செய்கை செய்வதற்கு பிரதேசத்தின் விவசாயிகள் அதிக விருப்பம் தெரிவிக்காமையால் அந்த இயந்திரங்களினால் பயனொன்று இல்லையென்பதாக	அந்த இயந்திரங்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	தெஹியத்தகண்டி கமநல சேவைகள் குழுவிற்கு சொந்தமான வாகனம் மற்றும் 17 இயந்திர உபகரணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 02 வருடங்கள் முதல் 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் பயன்படுத்த முடியாத வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை விற்றுத் தீர்ப்பதற்கும் பழுது பார்க்கக் கூடிய வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கும் குழு கவனம் செலுத்தியிருக்கவில்லை.	இந்த இயந்திர உபகரணங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு பொருத்தமானது என பொருள் மெய்மையாய்வு சபையின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் இதுவரை அனுமதி கிடைத்திருக்கவில்லை.	சொத்துக்களைப் பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது அவ்வாறு இல்லையாயின் ஏல விற்பனை செய்வதற்கோ தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ)	04 கமநல சேவைகள் குழுக்களுக்கு மாவட்ட கமநல சேவைகள் அலுவலகத்தால் 2004 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த 30 நீர்ப் பம்பிகள் கணக்காய்வு திகதி வரை பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்படுகின்றன.	ஏலத்தில் விற்பனை செய்வதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக.	சொத்துக்களை உரிய பிரகாரம் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது அவ்வாறு இல்லையாயின் முறையான பிரகாரம் விற்றுத் தீர்ப்பதற்கோ தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	02 கமநல சேவைகள் குழுக்கள் மற்றும் 02 கமநல வங்கிகளால் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 444,405 கூட்டுத்தொகையான 08 மென்பொருட்கள் மற்றும் உபகரண உருப்படிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டன.	இந்த உபகரண்கள பயன்பாட்டிற்காக தேவையான மென் பொருட்கள் இன்னும் நிலையங்களுக்கு கிடைக்காமல் இருந்ததுடன் கிடைத்தவுடன் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக	சொத்தக்களை முறைப்படி பயன்படுத்துவுதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	மல்வத்த கமநல சேவைக் குழுவிற்கு உரிய ரூபா 647,000 பெறுமதியான கை உழவு இயந்திரமொன்று 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.	கை உழவு இயந்திரத்தை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக	சொத்துக்களை முறைப்படி பயன்படுத்துவதற்கும் அவ்வாறில்லாது இல்லாவிட்டால் கைதவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
(ஊ)	15 கமநல சேவைகள் குழுக்களுக்குச் சொந்தமான கூட்டுப் பசளை கூறுகளாக்கும் 15 இயந்திரங்கள் 2022 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.	உரிய நிறுவனங்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	சொத்துக்களை முறைப்படி பயன்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
(எ)	02 கமநல சேவைகள் குழுக்களால் கமநல வங்கிக்கு 2010 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 859,907 பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.	பதில் அளிக்கப்படவில்லை.	சொத்துக்களை முறைப்படி பயன்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஏ)	கமநல சேவைகள் குழுக்கள் மற்றும் கமநல வங்கிகளின் செயற்திறனின்மையை அதிகரிக்கும் நோக்கில் 15 கமநல சேவைகள் குழுக்களால் 2024 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 4,216,920 பெறுமதியான 15 கணனி உபகரண தொகுதிகள் பயன்படுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்டது.	எதிர்காலத்தில் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக	- மேற்படி -

3.3 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்காக 14 கமநல சேவைக் குழுக்களில் 34 உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட அலுவலகத்தில் 03 உத்தியோகத்தர்கள் ஆக 37 உத்தியோகத்தர்களில் வெற்றிடங்கள் காணப்படுவதுடன் 13 கமநல சேவைக் குழுக்களில் 30 உத்தியோகத்தர்கள் மிகையாகக் காணப்பட்டனர்.	மிகையானதாகக் காண்பிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் சகலரும் தமிழ் மொழி உத்தியோகத்தர்களாக இருந்தமையால் வெற்றிடங்கள் காணப்படுகின்ற சிங்கள மொழி கமநல சேவைக் குழுக்களில் கடமைகளுக்காக நியமிக்க முடியாதுள்ளது.	வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மற்றும் மிகையான உத்தியோகத்தர்களை ஏனைய நிறுவனங்களுக்கு இணைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	நிலைய முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் பதவிகளுக்காக 19 கமநல சேவை குழுக்களில் 22 உத்தியோகத்தர் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் 03 உத்தியோகத்தர் என 25 உத்தியோகத்தர்ளுக்கு வெற்றிடங்கள் காணப்படுவதுடன் காரைதீவு கமநல சேவைகள் குழுவின் 02 நிலைய முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர்கள் மிகையாக காணப்பட்டனர்.	இந்த வெற்றிடங்களை எதிர்காலத்தில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக	பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகையான ஊழியர் எண்ணிக்கையை வெற்றிடங்களை பூர்த்தி செய் வதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	கமநல ஆராய்ச்சி மற்றும் உற்பததி உதவியாளர் பதவிகளுக்காக 21 கமநல சேவைகள் குழுக்களில் 89 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதுடன் 03 கமநல சேவைகள் குழுக்களில் 05 உத்தியோகத்தர்கள் மிகைகள் காணப்பட்டன.	இந்த வெற்றிடங்கள் எதிர்காலத்தில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக	- மேற்படி -

4. கமநல வங்கிகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய இலக்கம் 2012/04 என்ற கமநல அபிவிருத்தித் திணைக்கள சுற்றறிக்கையின் இலக்கம் 1.6 பிரிவின் பிரகாரம் கிராமிய விவசாய மக்களின் வாழ்வாதார நிலைமையை அபிவிருத்தி செய்வதை நோக்காகக் கொண்டு கமநல சேவைக் குழுக்கள் கமநல வங்கியினை முறையாக நடாத்திச் செல்ல வேண்டியிருந்த போதிலும் 07 கமநல சேவைகள் குழுக்களால் 2009 ஆம் ஆண்டின் பின்னர் விவசாய மக்களினால் வைப்புப் பணம் சேகரிக்கப்பட்ட போதும் கடன் வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	எதிர் காலத்தில் செயற்படு நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக	சுற்றறிக்கையின் பிரகாரம் விவசாயிகளுக்கு சலுகை வழங்கு வதற்காக கடன் வழங்குவதற்கு கமநல வங்கிகளை செயற்படு நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயத்தின் 2012 பெப்ரவரி 29 ஆந் திகதி இலக்கம் 2012/04 என்ற கமநல அபிவிருத்தித் திணைக்கள சுற்றறிக்கையின் இலக்கம் 2.6.2(vii) பந்தியின் பிரகாரம் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களால் பிரதேசங்களில் உள்ள விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள கடன் கால நேரத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையினால் 18 கமநல சேவைகள் நிலையங்களுக்கு உரியதாக 1999 சிறு போகத்தில் இருந்து 2024 சிறு போகம் வரை ரூபா 17,774,675 காலாவதியான கடன் மற்றும் வட்டி தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.	நிலுவைக் கடனை எதிர் காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக	காலாவதியான கடன்களை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	மஹஓயா கமநல வங்கியின் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிதிக்கூற்றுக்கிளல் முன்கொண்டு வரப்பட்டு வந்த ரூபா 634,308 பெறுமதியான பெற வேண்டிய சுழற்சிக் கடன் மீதி மற்றும் ரூபா 599,527 பெறுமதியான செலுத்த வேண்டிய சுழற்சி நிதிய மீதியை தீர்வு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர் காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன்..	சுழற்சி நிதிய கடன் மீதிகளை தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும்.